# டாபிந்து

பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது

ஆரம்பம் 1984

மலர் 42 | இதழ் 03 | 2026 பங்குனி மாத பதிப்பு


# உரிமை, சமத்துவம் மற்றும் அதிகாரமளித்தல் ஆகியவற்றிற்காக பெண்கள் ஒன்று திரண்டனர்




இந்த ஆண்டின் சர்வதேச பெண்கள் தினத்தை முன்னிட்டு கட்டுநாயக்க, பியகம, கொக்கல, வத்துபிட்டிவல பகுதிகளில் பெண்கள் வீதிகளில் இறங்கி தங்களின் உரிமைகளைப் பெற்றுக்கொள்ள சம்பந்தப்பட்ட தரப்புகளின் பொறுப்புணர்வை சுட்டிக்காட்டினர்.

வன்முறை மற்றும் துன்புறுத்தலுக்கு எதிராக, வாழ்வதற்கு ஏற்ற சம்பளம், பராமரிப்பு வேலை, நிலம் மற்றும் வீட்டு உரிமை, மொழி உரிமை மற்றும் பாலின அடையாளங்களை மதிக்கும் சமூக அமைப்பை உருவாக்க வேண்டும் என்பதற்காக அவர்கள் அந்த நாளில் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தற்போதைய சமூகத்தில் ஆடைத் தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் வேலை பாதுகாப்பின்மை, சமூக பாதுகாப்பு குறைபாடு, மற்றும் தொழிலாளர் சந்தையில் பெண்களின் பங்களிப்பு குறைந்து வரும் நிலையில், இதற்கான கொள்கைகள் வகுக்கும் போது வேலை சூழலில் உள்ள பிரச்சினைகளை குறைப்பதே முக்கிய நோக்கமாக இருந்தது. இதற்காக டாபிந்து கூட்டமைப்பு, ஸ்டண்ட் அப் மூவ்மன்ட், TGCWU, ஸ்ரபமாபிமானி அமைப்பு, RED, We Women Lanka போன்ற அமைப்புகள் இந்த போராட்டத்தை வெற்றிகரமாக நடத்தச் செயலில் பங்கேற்றன. "உரிமை, கௌரவம் மற்றும் சமத்துவம்"

2ஆம் பக்கம் பார்க்க...

## உள்ளே!


பக்கம் 03 – சர்வதேச பெண்கள் தின பிரகடனம்

பக்கம் 04-07 – எமது வேலை

பக்கம் 08 – ஆடைத்தொழிற்சாலைகளை மூடுவது சாதாரணமா?

பக்கம் 09 – தொழில் செய்யும் பெண்களுக்காக சமூகபாதுகாப்பு மற்றும் நியாயத்தை உறுதிப்படுத்தல்

பக்கம் 10 – சிந்தனை

பக்கம் 11 – கவிதை பக்கம், சமூக பாதுகாப்பு

## வியர்வைத்துளி கூட்டமைப்பு

221, வெலபட வீதி, கட்டுநாயக்க.
தொ.பே: 011 4 851 383
மின்னஞ்சல்: dabindu.infoco@gmail.com
முகநூல்: dabindu collective sri lanka:


# சமத்துவம், கௌரவம் மற்றும் நீதிக்கான தடைகளை அகற்றுவோம்

115 ஆவது சர்வதேச பெண்கள் தினம் கடந்த 8 ஆந் திகதி உலகளாவிய ரீதியில் பெண்கள் முகங்கொடுக்கும் சவால்களை முன்னிறுத்தி கொண்டாடப்பட்டது. இம்முறை ஐக்கிய நாடுகள் சபையின் தலைப்பாக நீதி என பெயரிடப்பட்டிருந்ததும் அவை சவால்களுக்கு உள்ளாகும் வகையில் தொழிலாளர் சமூகத்தின் பெண்கள் சட்டத்தின் முன் சாதாரண வெளிப்பாடுகள் தொடர்பாக குரல் கொடுப்பதற்கு அச்ச நிலைமை ஏற்பட்டிருந்தது. தொழிலில் பாதுகாப்பின்மை, வன்முறை, துன்புறுத்தல்கள் தொடர்பாக ஆய்வு அறிக்கையில் 78 சதவீதமான முறைபாடுகள் செய்யாமல் இருப்பது அறிக்கை இடப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது. சமத்துவம், கௌரவம், நீதிக்கு உட்படுத்த தடையாக உள்ளமை இதன்மூலம் வெளிப்படுகிறது. தொழில் உலகில் ஏற்படும் தொல்லைகள் மற்றும் வன்முறைகளை ஒழிப்பதற்காக C190 கொள்கை 2026 ஜனவரி 6 ஆம் திகதி அரசாங்கத்தினால் அனுமதி அளிக்கப்பட்டது. இருந்தும் அது பாராளுமன்ற சட்ட மூலமாக கொண்டுவரும் வரை அதன் உண்மையான பெறுபேற்றை தொழிலாளர்களுக்கு அனுபவிக்க முடியாதுள்ளது. அதனால் தொழில் சட்டங்கள் மீள் திருத்தம் செய்யப்பட்டுள்ள இச் சந்தர்ப்பத்தில் அது சம்பந்தமாக அவதானம் செழுத்த வகைக்கூறக்கூடியவர்களாக செயற்பட வேண்டியுள்ளது. அத்தோடு பெண் தொழிலாளர்கள் இருந்த அளவை விட குறைந்துள்ளதால் பெண்களுக்கு நிரந்தர தொழில் செய்வதற்கான வசதிகள் செய்து கொடுப்பதற்கு பகல்நேர குழந்தை பாதுகாப்பு மத்திய நிலையங்களை ஏற்படுத்த முன்வருவதோடு பாதுகாப்புடன் பொருளாதாரம், வேலை தொடர்பாக கொள்கை ஒன்றை உருவாக்க பாதுகாப்பான போக்குவரத்து முறைகள் மற்றும் சகல சமூகமயமாக்கத்தினூடாக கொள்கை ஒன்றை உருவாக்குதலுக்கு முன்வருதல் வேண்டும்.

தற்போது ஆடைத்தொழிலில் பிரதான தொழிற்சாலைகள் மூடுவதற்கு திட்டமிடப்பட்டுவருகிறது. சுய இயக்க இயந்திரங்கள் பாவனை, தொழில்நுட்பத்தை பாவித்தல் போன்ற காரணங்களால் தொழில் இழப்புகள், உலகளாவிய ரீதியில் ஏற்படும் வற்புறுத்தல்கள் போன்றவற்றால் சகல தாக்கங்களையும் தொழிலாளர் மீது திணிப்பது, இயற்கை அனர்த்தம் காரணமாக ஏற்படும். இழப்புகளின்போது அரசாங்கத்தின் பங்களிப்பு குறைவடைதல் போன்ற காரணங்கள் தற்போது தொழிலாளர்கள் வாழ்க்கையில் கடினமாக உள்வாங்கப்பட்டுள்ளது. இதனால் தர அடிப்படையில் சம்பளம் தொடர்பாக அவதானம் செலுத்தல் மற்றும் “சம்பளம்” உலகளாவிய வழங்கல் சங்கிலியின் ஒருபகுதியாகும் என்பதை உணர்தல் முக்கியமாகிறது. புதிய சவால்களினிடையே ஆய்வுகள் மேற்கொண்டு பாதுகாப்பான சூழலில், ஆரோக்கியமான தொழிலாளர்களையும், சுகாதாரமான தொழில் இடங்களையும் ஏற்படுத்தலுக்கு முன்வருதல், தரமான வாழ்க்கையும், கௌரவமான தொழிலுக்கும் தொழிற்சாலைகளில் நிலைத்தன்மையான இயக்கத்துக்கும் உதவியாக அமையும்.

1ஆம் பக்கத் **உரிமை, சமத்துவம் மற்றும்...**




என்ற தலைப்பில் பிரசுரங்கள் வெளியிடப்பட்டு விநியோகிக்கப்பட்டதுடன், சமூக ஊடகங்கள் வழியாக தகவல் பரப்பலும் மேற்கொள்ளப்பட்டது.

மேலும், சமீப காலங்களில் தொழிற்சாலைகள் திடீரென மூடப்படுவது, சுற்றுச்சூழல் பிரச்சினைகள் ஆகியவற்றிற்கும் கவனம் செலுத்தப்பட்டதுடன், நாளுக்கு நாள் வேலை சூழலில் ஏற்படும் சிக்கல்களை எதிர்கொள்ள ஒருங்கிணைந்த முயற்சியின் அவசியம் உணரப்பட்டது. இதன் அடிப்படையில் பிற அமைப்புகளுடன் இணைந்து கொண்டாடப்பட்ட சர்வதேச பெண்கள் தின நிகழ்வு வெற்றிகரமாக நிறைவுற்றது.





# சர்வதேச பெண்கள் தின பிரகடனம்

“சகல பெண்பிள்ளைகளுக்கும் நீதி, சாதாரணத்துவம் மற்றும் அது தொடர்பாக செயற்படல்” எனும் சர்வதேச தலைப்பின் கீழ் இம்முறை 2026 சர்வதேச பெண்கள் தினம் அபிமானத்துடன் டாபிந்து நாங்கள் கொண்டாடுகிறோம். இது ஒரு சுலோகம் மட்டும் அல்லாது இலங்கையின் பொருளாதாரத்தை சக்திமயப்படுத்தும். வெளிப்படாமல் உடைக்கும் ஆடைத்தொழிலாளர் பெண்களின் யதார்த்தத்தை வெளிப்படுத்தும் ஒரு சந்தர்ப்பமாகவே கருதுகிறோம்.

தமது பொருளாதார பிரச்சினைகளுக்கு தீர்வாக தொழில் தேடிவரும் பல்வேறு இடங்களில் இருந்து வரும் பெண்கள் சிறிய தங்குமிடங்களில் இறுகி வாழ்ந்துக்கொண்டு தமது சக்தியை கொடுத்து உழைப்பது அவர்களுக்கு மட்டுமல்ல. அவர்களில் தாய், மகள், மனைவி, சகோதரியாக தமது குடும்பத்திற்காகவே உணர்வுகள், பொருளாதார கஷ்டம், விலைவாசி உயர்வு, உயர்வான வாழ்க்கைச்செலவு, துன்புறுத்தல், பாதுகாப்பற்ற சூழல், சமூக சவால்கள் எனும் பல்வேறு சவால்களுக்கு மத்தியில் தம்மை சக்திமிக்கவராக ஆக்கிக்கொள்ள அவர்கள் எடுக்கும் முயற்சிகள் அவரது உரிமைகள் பாதுகாப்பது சகலரினதும் பொறுப்பாகும்.

சர்வதேச பெண்கள் தினம் கொண்டாடுவதற்கு மட்டுமன்றி செயற்பாடுகளின் முக்கியத்துவத்தை நினைவுப்படுத்தவே.

**இவ்வருடத்தில் டாபிந்து நாங்கள் ஆடைத் தொழிற்சாலை பெண்களோடு சேர்ந்து முன்வைக்கும் கோரிக்கைகளாக.**

- வேலை உலகின் தொழிலாளர் துன்புறுத்தல் மற்றும் வன்முறைகளை ஒழித்தல் தொடர்பான தொழிலாளர் சங்கத்தின் C190 பிரகடனம் (C190) பாராளுமன்றத்தில் சட்டமூலமாக அனுமதிப்பெறல் மற்றும் பலம் வாய்ந்தவையாக நடைமுறைப்படுத்தல்.
- இரவு நேர வேலை தொடர்பாக அவசியமான பாதுகாப்பான தொழில் செய்யும் சூழல் பாதுகாப்பான போக்குவரத்து வசதிகள், ஓய்விடம், போதியளவு வெளிச்சம், சுகாதார வசதிகளை பெற்றுக்கொடுத்தல்.
- பாதுகாப்பான மற்றும் நியாயமான கொடுப்பனவுகள் கொண்ட தங்குமிடம், வசதியான அவசர வேலைகளுக்கு தற்காலிக வதிவாளர்களின் அடிப்படை உரிமைகள், கௌரவம் என்பவற்றை உறுதிப்படுத்தல்.
- சகல தொழிலாளர்களின் தொழில் பாதுகாப்பை உறுதிப்படுத்தல், நினைத்தவாறு தொழிற்சாலைகளை மூடுதல், தொழிலாளர்களின் பதவி கீழிறக்கம் என்பன நிறுத்துதல்.
- தொற்றுநோய்கள், பொருளாதார பிரச்சினை, இயற்கை அனர்த்தம் உள்ள காலங்களில் தொழிலாளர்களை பாதுகாக்கும் சமூக பாதுகாப்பு முறைமையை அறிமுகப்படுத்தல்.
- தொழிலாளர்களின் சுகாதாரத்தையும் மற்றும் சமூகத்தையும் பாதுகாக்கும் சூழலை சட்டதிட்டங்களுக்கு உட்பட்டதாக பெற்றுக்கொடுத்தல்.
- தொழிலாளர் சட்டம் மீள்திருத்தத்தினூடாக பெண்களுக்கு கௌரவம், சாதாரணம் மற்றும் தேவையான வசதிகளை வழங்குதல்.
- பெண்கள் தொழிலாளர் படையணிக்கு உள்வாங்கும் சட்டத்தை உருவாக்குதல்.
- ஐந்து நாள் வேலை வாரத்தை நீக்குதல்.
- சம்பளம் வெட்டுதல் இல்லாத மாதவிடாய் நாள் லீவு பெற்றுக்கொடுத்தல், மாதவிடாய் நாட்களில் அதற்கான சுகாதார வசதிகளை ஏற்படுத்திக்கொடுத்தல்.
- நிறுவன முகாமைத்துவத்தால் நிர்வகிக்கும் சேவைக்காக தொழிலாளர் தலைவருடன் சுயாதீனமாக தொழிற்சங்கம் அமைப்பதற்கு வசதி அளித்தல். அந்த சங்கங்களில் பெண் தலைமைத்துவம் உறுதிப்படுத்தல்.

**இவை சலுகைகள் அல்ல உரிமைகள்.**

சகல ஆடைத்தொழிலில் வேலை செய்யும் பெண்களின் கனவு, எதிர்ப்பார்ப்பு, வியர்வை, மற்றும் கண்ணீருக்கும் பெறுமதி பெண்களின் குரல் கொடுப்பதில் அவை நிச்சயம் கிடைக்கப்பெறும்.

டாபிந்து நாங்கள் இந்த பெண்கள் தினத்தில் சவால்களின் மத்தியில் சளைக்காது உறுதியோடு குடும்பத்தினுள்ளும் வேலைச்சூழலில் தமது பங்களிப்பை வழங்கும் சகல பெண்களை கௌரவத்துடன் கொண்டாடுகிறோம்.

# அரச மற்றும் அரச சார்பற்ற அமைப்புகளின் பங்காளர்களுடனான கலந்துரையாடல்




2026 பெப்ரவரி 25 ஆம் திகதி வவுனியா மாவட்ட செயலாளர் காரியாலயத்தில் அரச மற்றும் சிவில் சமூக அமைப்பினர் மற்றும் டாபிந்து குழுமத்தினரிடையே நடைபெற்ற கூட்டம் மிகவும் வெற்றிகரமாக அமைந்தது. இக்கூட்டத்தில் பிரதேச சிவில் சமூக அமைப்பினர், அரச நிறுவனம் மற்றும் உரிய பங்குபற்றுனர்கள் அடங்களாக 25 பேர் பங்குபற்றினர். கலந்துரையாடலை நோக்கமாக கொண்டே இக்கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்த கலந்துரையாடலுக்கு மிகவும் முக்கியமாக வவுனியா மாவட்டத்தில் ஆடைத் தொழிலாளர் சுதந்திர வர்த்தக வலயங்களில் பணியாற்றும் பெண் ஊழியர்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகள் மற்றும் சவால்கள் தொடர்பாக அவதானம் செலுத்தப்பட்டது. இங்கு வெளியான மிகவும் பிரதான விடயம் சேவை நியதிகள், சமூக மற்றும் பொருளாதார பிரச்சினைகள், சுகாதார பிரச்சினைகள், உரிமைகள் தொடர்பான விளக்கமின்மை மற்றும் டிஜிட்டல் வன்முறைகள், சமூக ஊடகங்கள் முறையற்ற விதத்தில் பாவித்தல், தொழில் பாதுகாப்பின்மை, நீண்ட வேலைநேரம், குடும்ப வாழ்க்கை, விசேடமாக குழந்தை பராமரிப்புக்கு ஏற்பட்டுள்ள பலவந்தம் ஆகிய பிரச்சினை தொடர்பாக கலந்துரையாடப்பட்டது. அத்துடன் எதிர்வினை தரும் உற்பத்தி பாவனை, சேவை நிலையங்கள் சுகாதார பாதுகாப்பின்மை என்பனவும் வெளிப்படையாகியது.

பெண்களுக்கு மிகவும் நல்ல சந்தர்ப்பங்களை ஏற்படுத்தல் மற்றும் அவர்களின் சுதந்திரத்தை உறுதிப்படுத்தல் தொடர்பாக திறன் அபிவிருத்தியின் முக்கியத்துவம் தொடர்பாகவும் கவனம் செலுத்தப்பட்டது. அதுபோலவே சேவை நிலையங்களில் முகாமைத்துவத்துடன் நல்ல தொடர்பாடலை வைத்துக் கொள்ளவும் சேவை நியமங்கள் தொடர்பாக தேவைப்பாடுகள் பற்றியும் கலந்துரையாடப்பட்டது. இறுதியாக பங்குபற்றும் அரச மற்றும் சிவில் அமைப்பினரிடையே ஒத்துழைப்பை வலுப்பெற வைப்பதோடு சேவையாளர்களின் மற்றும் சேவை நியமங்களை உயர்த்துதல் தொடர்பாக எதிர்கால நடவடிக்கைகள் முன்னிறுத்தி யோசனைகள் முன்வைக்கப்பட்டன.

# கூட்டு உளநலத்துணை வேலைத்திட்டம்



கட்டுநாயக்க மற்றும் பியகம பிரதேசத்தில் கடந்த திட்வா புயலின் போது அனர்த்தங்களுக்கு உள்ளாகிய பெண்கள் தொடர்பாக உள ஆரோக்கியம் மற்றும் உளவியல் நலன் சம்பந்தமாக குழு ஆலோசனை கருத்தரங்குகள் நடத்தப்பட்டது. இதன்போது தாம் மகிழ்ச்சியாக இருப்பது எவ்வாறு அவர்களது சந்தோசத்தை அவர்களாகவே தேடிக்கொள்வது, எவ்வாறு முறையாக வாழ்க்கையை கொண்டு செல்வது தொடர்பாக கலந்துரையாடப்பட்டது. இதன்போது 2026.02.15 கட்டுநாயக்க 2026.03.01 மற்றும் 2026.03.15 ஆகிய தினங்களில் பியகமவில் நடத்தப்பட்டது. இதற்கு வளவாளராக உளவியல் ஆலோசகர் கங்கா ரத்னாயக்க அவர்கள் செயற்பட்டார்.

# அனைவருக்கும் போசனைமிக்க உணவுவேளை





கடந்த திட்வா புயலினால் அனர்த்தத்திற்கு உள்ளான வவுனியா மற்றும் பியகம பிரதேச ஆடைத்தொழிற்சாலைகளில் வேலைசெய்யும் பணியாளர்களுக்கு 2026.03.01 மற்றும் 2026.03.15 ஆகிய தினங்களில் வவுனியா பிரதேசத்திலும் 2026.03.15 ஆம் திகதி பியகம பிரதேசத்திலும் உணவு பகிர்ந்தளிக்கும் வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. அனைவருக்கும் போசனையுள்ள உணவு வேளையை பெற்றுக் கொடுப்பதே இதன் நோக்கமாக அமைந்தது.

# சுதந்திர வர்த்தக வலய பணியாளர்களுக்கான அனர்த்தத்திற்கு பின்னரான உதவிகள்

புயலினால் கடுமையாக பாதிக்கப்பட்டதன் பின்னர் அதிகமான வர்த்தக வலயங்களில் வேலை செய்யும் தொழிலாளர்கள் தமது உடமைகளை இழந்தும் வீடுகளை இழந்தும் அவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டும் பல்வேறு கஷ்டங்களுக்கு முகங்கொடுத்தனர். இந்த அவசர நிலைமையில் எமக்கு உதவியளிக்கும் நன்கொடையாளர்களின் ஒத்துழைப்புடன் பரந்தளவிலான உதவிகள் பகிர்ந்தளிப்பு வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

பாதிப்புகளுக்குள்ளான தொழிலாளர்களில் அவசர தேவைகளை நிறைவேற்றுவது அவர்களை பாதுகாப்பது அவர்கள் நிலைமைகளை சரிப்படுத்துவது இதன் நோக்கமாக அமைந்தது. பாதிப்புக்குள்ளான குடும்பங்களுக்காக உணவு பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக உணவுப்பொதிகள் பகிர்ந்தளிப்பது, சுகாதார மற்றும் தொற்றுநீக்கி மருந்துகள், கட்டில் போர்வைகள், சமையலறை உபகரணங்கள் மற்றும் பாடசாலை உபகரணங்கள் மற்றும் பாடசாலை உபகரணங்கள் வழங்கல் என்பன நடைமுறைப்படுத்தப்பட்டன. இதற்கு மேலதிகமாக பாதுகாப்பான வாழ்க்கை, வைத்திய பரிசோதனை, வைத்திய உதவி, வீடுகளை புனரமைக்கும் உதவித்தொகை என்பன வழங்கப்பட்டன. சுயதொழிலாளர்களுக்கு அவர்களில் வாழ்வாதாரத்தை மீண்டும் தொடங்குவதற்கும் அவற்றை பலப்படுத்தவும் விசேட உதவிகள் வழங்கப்பட்டன.

இந்த உதவித்தொகைகள் சுதந்திர வர்த்தக வலயங்களில் கடமையாற்றும் பாதிக்கப்பட்ட 250 இற்கும் மேற்பட்ட பணியாளர்களுக்கு வழங்கப்பட்டது. இதன் சலுகைகள் கடினமான காலங்களில் தொழிலாளர்களோடு ஒற்றுமையாக இருப்பதும் அர்ப்பணிப்பும் வெளிக்காட்டப்பட்டது. எமது பங்காளர்களின் ஒத்துழைப்பு மற்றும் பாதிக்கப்பட்டவர்கள் திடமாக இருக்கும் தகுதியினூடாக கௌரமான மற்றும் பாதுகாப்புடன் வாழ்வும் மீண்டும் மீண்டெழ உதவுவதே எமது இலக்காக கொண்டோம்.



# இம்முறை டாபிந்து குழுமத்தின் பெண்கள் தின கொண்டாட்டம்








தற்காலத்தை பொறுத்தவரையில் பெண்கள் ஒரு இடத்துக்கு வரையறுக்கப்பட்டவர்கள் அல்ல. இம்முறை பெண்கள் தினத்தில் தலைப்பு வாசகம் சகல பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகளின் சுதந்திரம் மற்றும் நியாயத்துக்காக செயற்படுவோம் என்பதான பெண்களை பலப்படுத்துவது முக்கியமானதாகும். அவர்களை ஊக்குவிக்க பல்வேறு பிரச்சாரங்கள் செய்தல் வேண்டும். இருந்தும் இவ்வுலகத்து ஐவகையான வஸ்த்துக்கள் உள்ளன. மனிதர்களை புதுமைப்படுத்துவனவற்றுள் ஒன்றுதான் இந்த உலகம். உலகம் என்பது மறைந்துள்ள மிகவும் அழகான இடம் இரண்டாவது சமுத்திரம் இன்னும் ஆராய்ச்சி செய்து முடிவதில்லை. இன்னும் முழுமையாக ஆராய்ந்து முடிக்கப்படாத சக்திகள் பல நிரம்பிய, மறைந்திருக்கும் அழகிய அதிசயங்களால் நிறைந்தது கடல் அடித்தளம்- இது பற்றி பேசும்போது ஐந்தாவது வஸ்துதான் பெண்கள் இன்னும் உலகின் பெண்களை பற்றி எவரும் புரிந்துக்கொள்ளவில்லை. அதனால் பலரும் பெண்கள் பலவீனமானவர்கள் என கூறுகின்றார்கள். உலக வரலாற்றில் பரிணாமம் பற்றி பேசுவோமானால் பெண்கள் மற்றும் ஆண்கள் ஆகிய இரண்டு பிரிவினருக்கும் கலாச்சாரத்தினால் சம்பிரதாயங்கள் வேறுபிரிக்கப்பட்டுள்ளன. எனினும் பரிணாமத்தில் வழங்கப்பட்டுள்ள முதன்மையான செயற்பாடுகள் சில எம்மால் தெரிந்துக்கொள்ள முடியும். அந்த வர்க்க வாதத்திற்கு நாம் விருப்பமின்மை எனினும் ஆண்கள் அடிப்படையாக செய்வது பிள்ளைகள் உருவாக்குவதற்கு உதவி செய்வது பாதுகாப்பு வழங்கல் மற்றும் குடும்பத்திற்கு உணவு வழங்கல் என்பனவாகும்.

அக்காலத்தில் பெண்களின் அடிப்படை செயற்பாடுகள் உணவு தயாரித்தல், குழந்தை பிரசவித்தல் மற்றும் பிள்ளைகளை பராமரித்தல் ஆகியனவே ஆகும். இக்காலத்தில் ஆண்கள் தமது சம்பிரதாய அடிப்படைகளை பாதுகாத்து கொண்டுள்ளபோது பெண்கள் தமது அடிப்படை சம்பிரதாயத்தை உடைத்து ஆண்களை ஆக்கிரமித்து முன்னேறி வருகின்றனர். பாதுகாப்பு, மற்றும் உணவு வழங்கல் என்பன போன்ற அடிப்படைகளை பெண்கள் தமதாக்கி கொண்டுவிட்டனர். இதை மேலும் வலுப்படுத்தி வெளிப்படுத்த டாபிந்து நாங்கள் 2026.03.08 ஆம் திகதி பெண்கள் தினத்தை கொண்டாடினோம்.

இதற்கு டாபிந்து பணிப்பாளர் மற்றும் உறுப்பினர்கள் சிவில் அமைப்புக்கள் சில Building and Wood Workers' International நிறுவனத்தின் அதிகாரிகள் பியகம பிரதேசத்தின் எமது அங்கத்தினர்கள் மற்றும் கட்டுநாயக்க பிரதேச அங்கத்தினர்கள் ஆகியோர் கலந்துக்கொண்டனர். இதன்போது டாபிந்து குழுமத்தின் நிறைவேற்று பணிப்பாளர் சமிலா துஷாரியினால் ஆரம்ப உரை நிகழ்த்தப்பட்டது. நிகழ்ச்சியின் முக்கிய விருந்தினராக கலந்து கொண்ட வழக்கறிஞர் ஷெலனி பலிஹவடன அவர்கள், C190 குறித்து மேலும் இந்த ஆண்டின் மகளிர் தின கருப்பொருளான "அனைத்து பெண்களுக்கும் மற்றும் பெண் குழந்தைகளுக்கும் உரிமைகள், சமத்துவம், கௌரவமளித்தல்" என்பதற்கான தேவையான சட்ட அம்சங்கள் மற்றும் அறிவுகளை பகிர்ந்தார். அதேபோல், தைரியமான 80 பெண்களுக்கு உலர் உணவுப் பொருட்களை பெற வவுச்சர்கள் வழங்கப்பட்டதுடன், சுதந்திர வர்த்தக வலயத்தில் பணிபுரியும் கர்ப்பிணிப் பெண்களுக்கு ஊட்டச்சத்து பொதிகள், உடைகள் மற்றும் சுகாதாரப் பொருட்களும் வழங்கப்பட்டன.

மேலும், மகளிர் தினத்தை முன்னிட்டு எங்களால் ஒரு போட்டியும் நடத்தப்பட்டது. இதில் வேலைத்தளங்களில் ஏற்படும் வன்முறை மற்றும் பெண்களுக்கு எதிரான வன்முறை, வேலை முடித்து வீடு திரும்பும் பெண்களின் வாழ்க்கையின் சிரமங்கள், பெண்ணாக இருப்பதனால் கிடைக்க வேண்டிய உரிமைகள், வீட்டுக்குள் பெண்கள் எதிர்கொள்ளும் வன்முறை (குடும்ப வன்முறை) போன்ற தலைப்புகளில் கவிதைகள், சுதந்திரக் கவிதைகள், TikTok வீடியோக்கள் ஆகியவை மகளிர் தினத்திற்கு சில வாரங்களுக்கு முன்பே சேகரிக்கப்பட்டன. எங்கள் பெண்கள் எழுதுவதிலும், பாடுவதிலும், நடிப்பதிலும் மிகவும் திறமையானவர்கள். அந்த போட்டியில் வெற்றி பெற்றவர்களையும் உட்பட அனைவருக்கும் மகளிர் தினத்தை முன்னிட்டு பரிசுகள் வழங்கப்பட்டன.

கவீஷா வன்னிநாயக்கா



# தைரியமான பெண்களுக்கு பெண்கள் தினத்தையொட்டி எங்களது கைகொடுப்பு





உயிரியல் விஞ்ஞானத்தின் அடிப்படையில் பெண்கள் இவ்வுலகத்தின் ஒரு ஜீவன். மெக்சிம் கோர்க்கி குறிப்பிடுவதுபோல உலகம் அழகுபெறுவது தாய்ப்பாலினால். பெண்கள் இல்லையெனில் மனித சஞ்சாரத்துக்கு விடிவு இல்லை. அதனால் பெண்கள் குடும்பத்தில், நாட்டில், உலகத்தில் அத்தியாவசியமான ஒரு ஜீவன் ஆகும். இவ்வருட சர்வதேச பெண்கள் தின கருப்பொருளாவது சகல பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகளின் உரிமைகள் நியாயத்துக்காக செயற்படுவோம் என்பதாகும். ஆடைத் தொழிற்சாலைகளில் வேலை செய்யும் கட்டுநாயக்க, பியகம பிரதேசங்களில் கர்ப்பிணி தாய்மார் 10 பேருக்காக உடைகள், சுகாதார பொருட்கள், உணவு அத்தியாவசிய பொருட்கள், போசனை உணவுப்பொதி பகிர்ந்தளிப்பு 2026.03.08 ஆம் திகதி மற்றும் 2026.03.15 ஆம் திகதி ஆகிய தினங்களில் இடம்பெற்றது.

# உற்சாகத்துடன் முன் செல்லும் பெண்களுக்கு சிறிய உதவி



பெண்கள் பலமானவர்களா இல்லையா என்பதை பார்க்க வருத்தி பார்க்க வேண்டும் என்ற பழமொழி உள்ளது. வலித்த இடத்தை மறந்து ஊக்கத்துடன் முன்செல்ல பெண்கள் ஆரம்பிப்பார்கள். சில குடும்பங்களில் கஷ்டம் வரும்போதும் பொருளாதார சிக்கல் வரும்போது பிரச்சினைகள் வரும்போதும் பல ஆண்கள் பயந்து ஓடி விடுவதை நாம் அநேகமாக காண்கின்றோம். ஆனால் பெண்கள் தாய், பிள்ளைகளை அரவணைத்து பொருளாதாரத்தை பலப்படுத்தி முன்னேறுகின்றனர். கடந்த காலத்தில் வெள்ளத்தின்போது பொருளாதார பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்த கட்டுநாயக்க, பியகம பிரதேச தொழிற்சாலைகளில் வேலை செய்யும் பெண்கள் 80 பேருக்கு 2026.03.08 ஆம் திகதி ரூபா 4000.00 பெறுமதியான வவுச்சர்களை வழங்கப்பட்டது.



# ஆடைத்தொழிற்சாலைகளை மூடுவது சாதாரணமா?

நீண்ட வரலாற்றைக் கொண்ட முன்னணி சர்வதேச பிராண்டுகளுக்காக ஆடை உற்பத்தி செய்யும் பல முன்னணி தொழிற்சாலைகள் இலங்கையில் இயங்கி வருகின்றன. இத்தொழிற்சாலைகளில் ஒவ்வொன்றிலும் குறைந்தபட்சம் 250-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை செய்து வருகின்றனர். ஆனால் தற்போது புதிய அலை ஒன்று உருவாகியுள்ளது. கட்டுநாயக்காவில் உள்ள NEXT தொழிற்சாலை மூடப்பட்டதைத் தொடர்ந்து, இலங்கையில் முன்னணி என அழைக்கப்படும் பல தொழிற்சாலைகள் மூடப்படலாம் என்ற எச்சரிக்கை எழுந்துள்ளது. இதன் மூலம் ஆயிரக்கணக்கான தொழிலாளர்களின் எதிர்காலமும் நம்பிக்கைகளும் சிதைந்து போகும் அபாயம் நிலவுகிறது.

பல தொழிலாளர்கள் வேலை வாய்ப்புகளைத் தேடி கிராமப்புறங்களிலிருந்து இடம்பெயர்ந்து வாழும் பெண்களாக உள்ளனர். உள்நாட்டில் இடம்பெயர்ந்திருக்கும் சுதந்திர வர்த்தக வலய தொழிலாளர்களுக்கு இந்த தாக்கம் மிகவும் கடுமையானதாகும், ஏனெனில் அவர்கள் தங்கள் சொந்த ஊர்களிலிருந்து தொலைவில் வாழ்கின்றனர். சுதந்திர வர்த்தக வலயங்களில் பணிபுரியும் பெரும்பாலானோர் உணவு, வீட்டு வாடகை, போக்குவரத்து மற்றும் அன்றாட வாழ்க்கைச் செலவுகளுக்காக முழுமையாக மாத சம்பளத்தைச் சார்ந்துள்ளனர். தொழிற்சாலைகள் திடீரென மூடப்படும் போது, அவர்கள் உடனடியாக வருமானத்தையும், தங்குமிட பாதுகாப்பையும், குடும்பத்தை பராமரிக்கும் திறனையும் இழக்கின்றனர்.

பல தொழிலாளர்களுக்கு கடன்கள், வீட்டு வாடகைச் செலவுகள், குழந்தைகளின் கல்விச் செலவுகள் மற்றும் பெற்றோர் அல்லது சகோதரர்கள் பராமரிப்பு போன்ற பொறுப்புகள் உள்ளன. திடீர் வேலை இழப்பு அவர்களை கடுமையான நிதி நெருக்கடிக்குத் தள்ளுகிறது. கட்டுநாயக்க மற்றும் பியகம சுதந்திர வர்த்தக வலயங்களில் பணிபுரியும் பலர் ஏற்கனவே போதுமான தொழிலாளர் பாதுகாப்பு அல்லது கொள்கைகள் இல்லாத பாதுகாப்பற்ற மனிதவள அமைப்புகளின் கீழ் வேலை செய்கின்றனர். தொழிற்சாலைகள் மூடப்படும் போது, இத்தொழிலாளர்களுக்கு முறையான இழப்பீடு, மாற்று வேலைவாய்ப்பு அல்லது சமூக பாதுகாப்பு பெரும்பாலும் கிடைப்பதில்லை. தொழிற்சாலைகளில் பல தசாப்தங்களாக பணியாற்றிய, குறிப்பாக 40 வயதுக்கு மேற்பட்ட தொழிலாளர்கள், வயது காரணமாக புதிய வேலை வாய்ப்புகளைத் தேடுவதில் சிரமம் அனுபவிக்கின்றனர்.

வடக்கு மாகாணத்தில் அமைந்திருக்கும் தொழிற்சாலைகளில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு இந்த பாதிப்பு இன்னும் தீவிரமாக இருக்கக்கூடும், ஏனெனில் போருக்குப் பிந்தைய பகுதிகளில் வேலை வாய்ப்புகள் ஏற்கனவே குறைவாக உள்ளன. போருக்குப் பின்னர் மாற்று வாழ்வாதார வாய்ப்புகள் இல்லாததால், வடக்கில் பல பெண்கள் ஆடைத்தொழில் துறை தொழிலாளர்களாக மாறினர். தொழிற்சாலைகள் மூடப்படுவது, ஏற்கனவே பாதிப்புக்குள்ளான சமூகங்களில் வறுமை, இடம்பெயர்வு அழுத்தம் மற்றும் பொருளாதார பாதுகாப்பின்மையை மேலும் அதிகரிக்கிறது. வடக்கிலுள்ள தொழிற்சாலைகளில் வேலை இழப்புகள் உள்ளூர் பொருளாதாரங்களையும் பாதிக்கின்றன. ஏனெனில் தொழிலாளர்களின் சம்பளங்கள் அப்பகுதிகளில் உள்ள குடும்பங்களுக்கும் சிறு வியாபாரங்களுக்கும் ஆதாரமாக உள்ளன.

எனவே தொழிற்சாலைகள் மூடப்படுவது தனிப்பட்ட தொழிலாளர்களை மட்டுமல்லாமல், குடும்பங்கள், சமூகங்கள், குழந்தைகளின் கல்வி, பெண்களின் பாதுகாப்பு மற்றும் இலங்கையின் தொழிலாளர் வர்க்க மக்களின் மொத்த சமூக மற்றும் பொருளாதார நிலைத்தன்மையையும் பாதிக்கிறது.

அநியாயமாக தொழிற்சாலைகள் மூடப்படுவதைத் தடுக்க, தொழிலாளர்களை பாதுகாக்க வலுவான தொழிலாளர் பாதுகாப்பு சட்டங்கள், முறையான இழப்பீடு, முன் அறிவிப்பு, சமூக பாதுகாப்பு மற்றும் அரசின் தலையீடு அவசியம் என தொழிலாளர்களும் தொழிலாளர் அமைப்புகளும் தொடர்ந்து கோரிக்கை விடுத்து வருகின்றனர்.அதன்படி, தொழிலாளர் சட்டங்களின் படி நிர்வாகம் செயல்படுவதை உறுதி செய்ய வேண்டியது அவசியம். அதேபோல் தொழிலாளர் திணைக்களமும் தொழிலாளர்களுக்கு நியாயத்தை வழங்குவதில் பொறுப்புடன் செயல்பட வேண்டும் என்பதை மீண்டும் மீண்டும் நினைவூட்டப்படுகிறது.

# தொழில் செய்யும் பெண்களுக்கான சமூகபாதுகாப்பு மற்றும் நியாயத்தை உறுதிப்படுத்தல்

வருடாந்தம் பெப்ரவரி 20 ஆம் திகதி உலக சமூக நியாயம் மற்றும் சமத்துவத்துக்கான தினம் இவ்வருடமும் சகலரும் சமத்துவம், சம உரிமை மற்றும் கௌரவத்தை பெற்றுக்கொடுப்பதற்கு முக்கியத்துவத்தை நினைவுறுத்தியது.

ஐக்கிய நாடுகள் சபையின் இத்தினம் ஆரம்பிப்பதன் நோக்கமாக வறுமை, தொழிலின்மை, பாலின வேறுபாடு, சமூகத்தில் ஒதுக்கப்படல் போன்ற பிரச்சினைகளை தீர்ப்பதற்கான பிரச்சாரங்களை மேற்கொள்வதே ஆகும். ஆடைத் தொழிலாளர்களுடன் நெருக்கமான தொடர்புகளை பேண செயலாற்றும் அமைப்பாக டாபிந்து நாங்கள் இந்த சமூக நியாய தினத்தை இலங்கையில் பொருளாதாரத்துக்கு பாரிய பங்களிப்பு செய்யும் ஆடைத் தொழிலாளர் பெண்கள் முகங்கொடுக்கும் தொடர்ச்சியின் யதார்த்தங்களை நினைவுப்படுத்தும் ஒரு சந்தர்ப்பமாகவே கருதுகிறோம்.

இலங்கையின் பல்வேறு பிரதேசங்களில் இருந்து சுதந்திர வர்த்தக வலயத்தில் தற்காலிகமாக பதிவாகியுள்ள சகல தொழிலாளர்களின் நோக்கம் தமது அடிப்படை தேவைகளை நிறைவேற்றிக்கொள்வதற்காக தேவையான பணத்தை சம்பாதித்துக் கொள்வதே. அவர்களின் பங்களிப்பு நாட்டின் பொருளாதாரத்தை நிலையாக கொண்டு செல்ல தேவைப்பட்ட போதும் அநேகமான பெண்களுக்கு குறைந்த சம்பளமாக தொழில் பாதுகாப்பின்மை, சமூக பாதுகாப்பு இன்மை போன்ற பல்வேறு துன்புறுத்தல்கள் மற்றும் பல சவால்களுக்கு முகங்கொடுக்கிறார்கள். அதுமட்டுமன்றி அவர்களுக்கு தமது தொழிலும் தமக்குதொலைவில் இருக்கும் தமது குடும்பத்தின் தொடர்புகளை ஏற்படுத்தி கொள்ளல் என்பதாகும்.

எனினும் சகல தொழிலாளர்களுக்கும் சமூக நியாயம் எனும் உரிய கௌரவம், சமத்துவம் கொண்ட தொழில் செய்யும் சூழல் அமைதல், மற்றும் உரிமைகள் கிடைத்தல் வேண்டும். அவ்வாறே பெண் தொழிலாளர்களின் குரலை மதித்தல், தமது வாழ்க்கை சீராக அமைத்துக் கொள்ளும் உரிமை உள்ளவர்கள் என அவர்கள் ஏற்றுக்கொள்ளுதல். சமூக நியாயத்தை உறுதிப்படுத்தல் நாம் எல்லோரினதும் வகை கூறலாகும். அதற்காக அரசு, சிவில் அமைப்புகள் ஆகிய சகலரும் செயற்பட வேண்டும். பெண்கள், உங்கள் திறமைகள் மற்றும் உங்கள் குரலால் சமூக நீதியுடன் கூடிய சாதாரணத்துவம் கொண்ட சமூகத்தை ஏற்படுத்தலாம். அதற்காக முன்வருவோம்.

ருவினி சகுந்தலா



# சிந்தனை

எமது தினத்தை கொண்டாடுவதற்காக 8 ஆம் திகதி காலையிலேயே மணிக்கூட்டு கோபுரத்தின் அருகே சென்றோம். மனதிற்கு பலத்த பெருமையாக இருந்தது. எம்மைப்பற்றி குரல் கொடுக்க நானும் உதவினேன். நான் வாசித்த கவிதை ஒன்று ஞாபகம் வருகிறது.

**நாங்கள் உண்ணும் முறை – அடுப்புக்கு தெரியும்**

**பிள்ளைக் குட்டிகள் – உண்பது...**

**அவர்களுக்கு மணி – எமக்கு நெருப்பு**

**மாற்றத்திட்டம் - எங்களுக்கு இல்லை.**

இதைவிட நாங்கள் என்ன சொல்வது, ஆனால் எமது எசமானர்களுள் என்றைக்கு எங்களைப் பற்றி புரிய போகிறது. நான் என்றால் வேலை செய்யும்போது என்னை திட்டுபவர்களை மனதால் சபித்துக்கொண்டு மனதைத் திடப்படுத்திக் கொண்டேன். வேலைத்தளத்தில் பொறியில் மேல் விழுந்து இறந்தாலும் பார்ப்பதற்கு ஒரு நாதியும் இல்லை. தொழிற்சங்கங்கள் சேவை சபைகள், HR என்பது யார்? எங்கே எமது பிரச்சினைகள் பேசப்பட்டது. வீதிகள் கோஷமிடும் போது பயமும் ஏற்பட்டது. வேலைத்தளத்துக்கு சொல்லி எனது வேலையும் இல்லாமல் போய்விடுவோமா என்ற பயம். இருந்தும் எமது தினத்தில் நாம் வீதிக்கு வராமல் யார்வருவது எமது தினத்தில் நாம் வீதிக்கு வராமல் யார் வருவது அன்றையும் பேச்சில் கூறப்பட்டது. 16 மணிநேர வேலை நேரத்தை குறைப்பதாக அன்றைய உரைகள் மிகவும் மெச்சத்தக்கவை. சுமையலறையில் வேலைகளை பகிர்ந்து கொள்வது பற்றியும் பேசப்பட்டது. வீட்டு வேலைகள் பெண்களுக்கு சிக்கி இருக்கும் ஒன்று. வீட்டு வேலையை நிறுத்தினால் என்ன நடக்கும் என்று வளவாளர் கேட்கும்போது எனக்கு நினைவுக்கு வந்தது என் அம்மாவை. அப்பா எவ்வாறு கஷ்டப்படுகிறார் எழும்பும் போதே தேநீர் கேத்தலை சூடாக்கிக் கொண்டே ஆண்கள் 3 பேர் இருந்தாலும் அவர்கள் கையில் சமைத்த உணவை ஒரு நாள் நாம் உண்டதில்லை. அது எமக்கு கனவு போன்றது. அதற்கு கூறிய விடயங்களுக்கு எனக்கு துக்கம் ஏற்பட்டது. எவ்வாறு சுமையை அவர்களை சுமக்கிறார்கள் என்று. உண்மைதான் இதற்கு ஒரு கொள்கை வகுக்க வேண்டும். இயன்றளவு டாபிந்துவினால் வவுச்சர் வழங்கினார்கள். எமக்காக குரல் கொடுக்கும் பிரதேசத்தில் எங்களை பற்றி யார் சிந்திக்க கிடைத்த கைகளை நிரப்பிக் கொண்டு நாம் சென்றோம்.

# பெண்கள்

தன் கரங்களில் தாங்கும்
கிண்ணத்தின் பொன்னான வளையங்கள்
உலகிற்கு கொண்டு வரும்
மலர்மண நறுமணம்

வீட்டின் வாசலில் காத்திருக்கும்
அன்பின் மென்மையான தொடுதல்
சிறப்பான உலகை உயர்த்தும்
பெண் அவள்தானே...

தொழிற்சாலையில் இயந்திரங்கள்
ஒலிக்கும் இடங்களில்
மருத்துவமனையில் நலம் தரும்
அன்பான இதயம்

ஆசிரியையாக வகுப்பறையில்
நல்லதைக் கற்பிக்கும்
எங்கும் திகழும்
பெண்ணின் சிறப்பு இதுதானே...

வேலையில் ஈடுபடும்
அவள் இரு கைகள்
கனவுகளை கட்டியெழுப்பும்
அவள் மனம்

சமூகத்தில் ஒரு நட்சத்திரம்
அனைவருக்கும் அன்பளிக்கும்
பெண்ணின் வலிமை
உலகமெங்கும் பரவுகின்றதே...

ஏ.எம்.ஷம்மி ஷசிரங்கி
பியகம சுதந்திர வர்த்தக வலயம்



# தொழிலாளர் சட்ட திருத்தங்களுக்கு முன் தொழிலாளர்களுடன் ஆலோசிக்க வேண்டும்

தொழிலாளர் சட்டங்களை மறுசீரமைப்பது குறித்து இந்நாட்களில் பல்வேறு நிலைகளில் விவாதங்கள் நடைபெற்று வருகின்றன. எனினும், இந்த சட்ட மாற்றங்களுடன் தொடர்புடைய மிக முக்கிய தரப்பான தொழிலாளர்களின் கருத்துகளும் பரிந்துரைகளும் போதுமான அளவில் சேர்க்கப்பட வேண்டும் என்று தொழிலாளர் மற்றும் சமூக செயற்பாட்டாளர்கள் வலியுறுத்துகின்றனர்.

குறிப்பாக சுதந்திர வர்த்தக வலயங்களில் பணிபுரியும் பெண்கள், தொழிற்சாலை தொழிலாளர்கள், மீன்வளத் துறையில் பணிபுரியும் பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை கருத்தில் கொள்ளாமல் மேற்கொள்ளப்படும் சட்ட திருத்தங்கள் நடைமுறையில் அநியாயமான நிலைமைகளுக்கு வழிவகுக்கக்கூடும் என்று அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

சேவை நேரம், சம்பளம், வேலை பாதுகாப்பு, மகப்பேறு நலன்கள், சமூக பாதுகாப்பு மற்றும் பணியிட வன்முறையிலிருந்து பாதுகாப்பு போன்ற அம்சங்கள் தொழிலாளர் சட்டங்களில் முக்கிய கவனத்தைப் பெற வேண்டும் என்றும் அவர்கள் குறிப்பிடுகின்றனர். குறிப்பாக ILO C190 ஒப்பந்தத்துக்கு இணங்க தொழிலிட வன்முறை மற்றும் துன்புறுத்தல்களைத் தடுக்கும் சட்டப் பாதுகாப்புகள் வலுப்படுத்தப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தப்படுகிறது.

தொழிலாளர்களின் வாழ்க்கையையும் எதிர்காலத்தையும் நேரடியாக பாதிக்கும் சட்டங்கள் குறித்து தீர்மானங்கள் எடுக்கப்படும் போது, தொழிலாளர்களின் குரலுக்கு முன்னுரிமை வழங்குவது மிகவும் அவசியமாகும். எனவே தொழிலாளர் சட்ட மறுசீரமைப்பு தொடர்பான கலந்துரையாடல்களில் தொழிலாளர்கள், தொழிற்சங்கங்கள் மற்றும் பெண்கள் அமைப்புகள் செயற்பாட்டுடன் இணைக்கப்படுவது காலத்திற்கேற்ற தேவையாகும் என்று சமூக செயற்பாட்டாளர்கள் தெரிவிக்கின்றனர்.



# பெண்களை இரவு வேளையில் பணியில் ஈடுபடுத்துதல்

இரவு வேலை என்பது இரவு 10.00 மணி முதல் காலை 5.00 மணி வரை தொடர்ச்சியாக வரும் 11 மணி நேர காலப்பகுதியைக் குறிக்கிறது. 18 வயதுக்கு மேற்பட்டவர்களையே இரவு வேலையில் ஈடுபடுத்தலாம்.

**பெண்களை இரவு நேர வேலையில் ஈடுபடுத்தலாமா?**

ஆம். ஆனால், அதற்கு முன் தொழில் வழங்குநர் தொழிலாளர் ஆணையாளரின் எழுத்து மூலமான அனுமதியைப் பெற வேண்டும். அந்த அனுமதியைப் பெறுவதற்கு முன் சில நிபந்தனைகளை பூர்த்தி செய்ய வேண்டும்.

எந்த பெண்ணையும் அவளது விருப்பத்திற்கு எதிராக (வலுக்கட்டாயமாக) இரவு வேளையில் ஈடுபடுத்தக்கூடாது.

**பகல் வேலையில் ஈடுபட்டவரையே அதே நாளில் இரவு வேலையில் ஈடுபடுத்தலாமா?**

ஒரு நாளில் காலை 6.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை வேலை செய்த எந்தப் பெண்ணையும் அதே நாளில் இரவு 10.00 மணிக்குப் பிறகு வேலைக்கு அமர்த்தக்கூடாது.

**இரவு நேர வேலையில் ஈடுபடும் பெண்களுக்கு ஊதியம் எப்படி வழங்கப்படும்?**

இரவு நேர வேலையில் பணிபுரியும் ஒவ்வொரு பெண்ணும், அவளது சாதாரண ஊதியத்தின் குறைந்தது 1½ பங்கு (ஒன்றரை பங்கு) சம்பளம் பெற வேண்டும். அந்த தொகைக்கு ஊழியர் நல நிதி (EPF) பங்களிப்பும் வழங்கப்பட வேண்டும்.

இரவு நேர வேலையில் பணிபுரியும் பெண்களுக்கு ஓய்வு அறை மற்றும் உணவு மற்றும் பானம் வழங்கப்பட வேண்டும்.

பெண்களின் நலனை கண்காணிக்க பெண் மேற்பார்வையாளர்கள் நியமிக்கப்பட வேண்டும்.

ஒரு மாதத்தில் எந்தப் பெண்ணையும் 10 நாட்களுக்கு மேல் இரவு வேலையில் ஈடுபடுத்தக்கூடாது.

இரவு நேர வேலையில் ஈடுபடும் காலத்தில் சேவை நேரத்தை இடைநிறுத்த முடியாது. முழு இரவு பணியாற்ற அனுமதி வழங்கப்பட வேண்டும்.

**இந்த நிபந்தனைகள் அனைத்து பெண்களுக்கும் பொருந்துமா?**

இந்த நிபந்தனைகள் தொழில் துறை நிறுவனங்களில் பணிபுரியும் பெண்களுக்கு மட்டுமே பொருந்தும்.

கண்காணிப்பு அல்லது தொழில்நுட்ப பொறுப்பு பதவிகளில் உள்ள பெண்கள், உடல் உழைப்பு குறைந்த சுகாதார மற்றும் நல சேவைகளில் ஈடுபட்ட பெண்கள், ஒரே குடும்ப உறுப்பினர்கள் மட்டுமே பணிபுரியும் தொழிற்சாலைகளில் உள்ள பெண்கள் ஆகியோருக்கு இந்நிபந்தனைகள் பொருந்தாது.

கடைகள் அல்லது அலுவலகங்களில் பணிபுரியும் பெண்களை இரவு 8.00 மணி வரை மட்டுமே வேலைக்கு அமர்த்தலாம்.

ஹோட்டல்கள் அல்லது உணவகங்களில் பணிபுரியும் பெண்களை இரவு 10.00 மணி வரை வேலைக்கு அமர்த்தலாம்.

இரவு நேர வேலை நிபந்தனைகளை மீறும் தொழில் வழங்குநர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முடியுமா?

ஆம். நடவடிக்கை எடுக்கலாம். நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டால் ரூ. 10,000 வரை அபராதம் அல்லது ஓராண்டு வரை சிறை தண்டனை அல்லது இரண்டும் வழங்கப்படலாம்.

**மேலும் தகவல்களுக்கு அருகிலுள்ள தொழிலாளர் அலுவலகத்தை தொடர்பு கொள்ளவும் அல்லது**

**011-2587315 / 011-2369297 / 011-2368539 / 011-2369800 என்ற எண்களுக்கு அழைக்கவும்.**

மூலம்:
பெண்கள் மற்றும் குழந்தைகள் விவகார பிரிவு,
தொழிலாளர் துறை.

இல, 221, வெலபட வீதி, கட்டுநாயக்கவை வசிப்பிடமாகக் கொண்ட எச்.ஐ.சமன்மலி ஆகிய என்னால் ரத்வெகி அச்சகத்தில் அச்சிடப்பட்டது.